அசல் வழக்கு எண்.65/2006 நாள்: 24.04.2026

வா.சா.1 திரு. முருகானந்தம்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1) நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த இதே வழக்கினை நிரூபணம் செய்யவில்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சார்பதிவாளர் அலுவலகத்திலுள்ள ஆவணங்களை எனக்கு வழங்க உத்தரவிட வேண்டுமென்று இதே நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி மனு எண்.142/2009 என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி மனுவினை இதேநீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.22 முதல் வா.சா.ஆ.33 வரையிலன சான்றாவணங்கள் எப்படி எனக்கு கிடைத்தது என்றால் வீட்டிலிருந்தது அதைதான் தாக்கல் செய்தேன்.

2) எந்த வீட்டிலிருந்து எடுத்தேன் என்றால் எனது சின்ன தாத்தா ம.சுப்ரமணியன் நண்பர் சிவானந்தம் மகன் சிவக்குமார் என்னிடம் கொடுத்தார். மேற்படி சிவானந்தம் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. மேற்படி சிவக்குமார் உயிருடன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். மேற்படி சிவக்குமாரை விசாரித்தால் ஆவணம் எப்படி கிடைத்தது என்று தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் கோவிலுடைய நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்று எந்த ஆவணத்திலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நிலத்தை ஒத்திக்கு வைத்து அதிலிருந்து வருமானத்தை வைத்து கோவிலுக்கு பூஜை செய்து வந்தோம்.

3) நிலத்தை ஒத்திக்கு வைத்து அதிலிருந்து வருமானத்தை வைத்து கோவிலுக்கு பூஜை செய்து வந்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் நான் பிறக்கவேவில்லை என்றால் சரிதான். எதனடிப்படையில் மேற்படி நிலங்களிலிருந்து வரும் வருமானத்தை வைத்து கோவிலுக்கு பூஜை செய்ய வேண்டும் என்று நான் கூறிகிறேன் என்றால் பெரியவர்கள் சொன்னார்கள். மேற்படி கோவிலுக்கு பூஜை செய்வதற்கு இந்த நிலங்களிலிருந்து வரும் வருமானங்களை கொண்டு செய்ய வேண்டும் என்பதற்கு சிற்றேடு அல்லது பேரேடு நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.24-ன் அடிப்படையில்தான் நான் சொத்துக்களிலிருந்து வரும் வருமானத்தை வைத்து பூஜை செய்கிறேனா என்றால் ஆமாம்.

4) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.24-ல் நிலத்திற்கான புல எண், விஸ்தீரணம் அதற்கான தீர்வை ஆகியன எதுவும் காணப்படவில்லை என்றால் எழுத்து மிகசிறியதாக இருப்பதால் என்னால் கூறஇயலவில்லை. கோவில் நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி வா.சா.ஆ.24 ஆவணமானது யாருக்கு வந்தது என்ற விவரமும் அதில் இல்லை என்றால் சரியல்ல, எனது தாத்தா சுப்ரமணியன் பெயருக்கு வந்தது. வா.சா.ஆ.29 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் கோடிப்பிள்ளையார் கோவிலுக்குரிய பட்டா என்பதால் தாக்கல் செய்துள்ளேன். பட்டா எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.28 குத்தகை ஆவணமானது யார்யாருக்கிடையே ஏற்படுத்தப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை.

5) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.22 முதல் வா.சா.ஆ.33 வரையிலான ஆவணங்கள் பற்றி எனக்க எதுவும் தெரியாது என்றாலும், வேறு யாருக்கோ தொடர்புடைய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல, நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் எங்களுக்கு கிடைத்தது. எந்த நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் யார் யாருக்கிடையே நடந்த வழக்கில் கிடைத்தது என்றால் ம.சுப்ரமணியனுக்கும் சோ.சுப்ரமணியனுக்கும் இடையே இதே நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் கிடைத்தது. அது என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு என்று தெரியுமா என்றால் சோ.சுப்ரமணியன் என்பவர் அவருக்குதான் வழக்கு சொத்து பாத்தியப்பட்டது என்று உரிமை கொண்டாடியது தவறு எனக் கூறி எனதுது தாத்தா ம.சுப்ரமணியன் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

6) மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் சோ.சுப்ரமணியனுக்கு எதிராக நிறைவேற்று மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி தீர்ப்பு எந்த வருடம் வழங்கப்பட்டது என்றாவது ஞாபகம் இருக்கிறதா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் சோ.சுப்ரமணியன் என்பவர்தான் கோடிப்பிள்ளையார் கோவில் பரம்பரை அறங்காவலராக பார்த்துக் கொண்டிருந்தார், என்னுடைய முன்னோர்கள் அதை தெரிந்தே எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தார்கள் என்றால் சரியல்ல, சோ.சுப்ரமணியனுக்கு சொந்த ஊர் மாரியம்மன்கோவில் ஆகும், அவர் திருப்பூந்துருத்தி கிராமத்திற்கு பிழைப்பிற்காக வந்தவர் ஆவார். 1ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால் உறவினரல்ல ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்.

7) மேற்படி கோவிலின் பரம்பரை அறங்காவலர் என்ற பதவியை 1ம் பிரதிவாதியின் தகப்பனார் சோ.சுப்ரமணியன் வகித்து வந்தார், அவரது இறப்பிற்கு

பிறகு அவரது மகன் 1ம் பிரதிவாதி தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை உத்தரவின்படி பரம்பரை அறங்காவலராக பணிபுரிந்து அவர் இறந்தபிறகு அவரது மகன் வழக்கின் 8ம் பிரதிவாதியான இளங்குமரன் தற்சமயம் பரம்பரை அறங்காவலராக பணியாற்றி வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியால் எனக்கு எதிராக இந்து சமய அறநிலைய கட்டளைகள் சட்டம் பிரிவு 78-ன் கீழ் தாக்கல் செய்த மனு தற்போதும் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையரிடம் நிலுவையிலுள்ளது என்றால் சரிதான். அதேபோல் 4ம் பிரதிவாதிக்கும் எதிராக மேற்படி மனு நிலுவையிலுள்ளது என்றால் சரிதான்.

8) எனது வழக்குரையில் கூறப்பட்டுள்ளதுபோல் நானோ, எனது முன்னோர்களோ கோடிப்பிள்ளையார் கோவிலுக்கு அறங்காவலர்களாக பணியாற்றியது இல்லை என்றால் சரியல்ல. அதேபோல் நான் பரம்பரை அறங்காவலராக பணிபுரிந்தற்கு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனது தாத்தா பார்த்து வந்த அறங்காவலர் பணியினை நான் பார்த்து வருகிறேன். எனது வீட்டிற்கு மின் இணைப்பு பெறும்போது 1ம் பிரதிவாதி பரம்பரை அறங்காவலர் என்ற முறையில் அனுமதி கொடுத்துதான் எனக்கு மின் இணைப்பு கிடைத்தது என்றால் சரியல்ல. கோவில் பெயரிலுள்ள நிலம் தற்போதுவரை கோவில் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். கோவில் நிலத்தை 1ம் பிரதிவாதி விற்றாரா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.29-ல் விஸ்தீரணம் எவ்வளவு உள்ளது என்றால் 1 ஏக்கர் 37 செண்ட் உள்ளது.

9) மேற்படி ஆவணம் எந்த வருடத்திற்குரியது என்றால் தெரியாது. 1980-ல் 1 ஏக்கர் 37 செண்ட் நிலம்தான உள்ளது அது தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கோவில் நிலத்தில் சில பகுதி கிராம மக்கள் பயன்பாட்டிற்கு சாலை அமைக்க பயன்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/Muruganantham

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.24 15:33:11 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU